27th July 1962]

வாலாஜா வட்டாரம் (சமுதாய நல திட்டம்)

*720 கேள்வி.—திரு. ஆர். அப்துல் கலீல் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-ல் வாலாஜா வட்டார சமுதாய நல திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) ஒதுக்கிய தொகை முழுவதும் செலவழிக்கப்பட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) A sum of Rs. 1,76,547 has been provided in the Wallajah Panchayat Union Budget for 1961–62.

(இ) A sum of Rs. 1,33,851 has been spent.

Madras City (classification as "A" class).

*722 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have made any representation to the Central Government to classify the City of Madras as "A" class city; and

(*b*) if so, the results thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir. It will not be appropriate for the State Government to offer any suggestions to Central Government in regard to the allowances to be paid to their employees. The classification of Madras as "A" Class City is significant only in respect of allowances to be drawn by the Central Government employees.

(*b*) Does not arise.

திரு. மீ. கலியாணசுந்தரம் : முன்பு ஒரு முறை இந்த சபையிலே முதல் அமைச்சர் அவர்கள் சென்னை நகரத்தை "ஏ" பிரிவாக உயர்த்துவதற்கு எல்லா நடவடிக்கைகளையும் நான் எடுப்பேன் என்று உறுதி கூறியிருக்கிறார்கள். அப்படி அந்த உறுதிமொழிப்படி நடந்து கொண்டார்களா என்று அறிய விரும்புகிறேன். முதலமைச்சர் என்ற முறையில் அரசாங்கத் தோரணையில் செய்யாவிட்டாலும்கூட அவர்கள் சொந்தப் பொறுப்பில் மத்திய சர்க்காருக்கு எழுதியிருக்கிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் முதலமைச்சர் அவர்கள் முன்பு இந்த மன்றத்திலே தெரிவித்ததற்கிணங்க அவர்கள் இதில் கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இது சம்பந்தமாக மத்திய நிதி இலாகா உதவி அமைச்சர் பதிலளிக்கக்கூடிய சமயத்தில் சென்னை அரசாங்கத்திலிருந்து அதிகாரபூர்வமாக எந்த கோரிக்கையும் வரவில்லை என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே

அதிகாரபூர்வமாக அனுப்பாவிட்டாலும் முதலமைச்சர் அவர்கள் சொந்தப் பொறுப்பில் அனுப்பியிருக்கிறார் என்று எடுத்துக் கொள்ளலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வேண்டிய நடவடிக்கைகளை எந்தவிதத்தில் எடுத்துக்கொண்டால் பலன் தரக்கூடியது என்று பார்த்து அந்த வகையில் கனம் முதல் அமைச்சர் அவர்களும் இந்த அரசாங்கமும் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அவ்வாறு அதிகாரபூர்வமாக இல்லையென்றாலும் வேறு வகையில் கனம் முதலமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்தி வருகிறார்கள்.

நீதி, நிர்வாக இலாகா

* 723 **கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சென்னை ராஜ்யத்தில் நீதி, நிர்வாக பிரிவினை பூர்ண மாக அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டதா ?

(இ) இல்லை என்றால் அதற்குரிய காரணங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) The Scheme of Separation of Judiciary from the Executive has been implemented completely in all the districts in this State, except in areas like Kodaikanal taluk in Madurai district and in Gudalur taluk and Masinagudi firka of Ootacamund taluk in the Nilgiris district.

(இ) The work in those areas is light and it is not economical to appoint full time officers in such places.

திரு. டி. கார்ச்சா கவுடர் : கூடலூரில் தற்போது அநேக கிரிமினல் வழக்குகள் பதிவாகி வருகிறது. அதை தாசில்தார் கவனிக்க முடியாமலும், நிர்வாகத்தை ஒழுங்காக கவனிக்க முடியாமலும் இருக்கிறார்கள். சமீபத்தில் பார் அஸோசியே ஷனிலும், தனி நீதிபதி வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதை அரசாங்கம் கவனிப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கூடலூர் தாலுகாவைப் பொறுத்த மட்டில் இந்த முறையை மாற்றுவது பற்றி இப்போது அரசாங்கம் யோசித்து வருகிறது. கனம் அங்கத்தினர் இந்த பட்ஜெட்டில்கூட விவரங்களை கண்டிருப்பார்கள். பட்ஜெட் நிறைவேற்றப்பட்ட பிறகு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப் படும்.

திரு. ஜே. மாதா கவுடர் : கூடலூரில் தனி மாஜிஸ்ட்ரேட் வைப்பதற்கு சௌகரியம் இல்லையென்றாலும் உதகையில் உள்ள மாஜிஸ்ட்ரேட்டை கூடலூருக்கு வாரத்திற்கு இரண்டு நாட்கள் சென்று தாவாக்களை முடிக்கக்கூடிய அளவில் ஏற்பாடு செய்தால் என்ன ?